Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 265

வெள்ளிக்கிழமை 18 ஓகஸ்ட் 2023

ஆவணி 01 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

குருந்தூர்மலையில் பொங்கல்:

# தமிழர் வழிபாட்டுரிமைக்கு தடை விதிக்கவே முடியாது!

முல்லைத்தீவு நீதிமன்றம் நேற்று அதிரடி

**முல்லைத்தீவு, ஓகஸ்ட் 18**

குருந்தூர்மலையில் தமிழர்கள் வழிபடுவதை, சப்புமல் கஸ்கட ராஜமகா விகாராதிபதி எதிர்க்கின்றார் என்பதற்காக தமிழர்களின் வழிபாட்டுரிமைக்கு தடைவிதிக்க முடியாது. ஒருவரின் மத வழிபாட்டுரிமையை மறுப்பது பாரதூரமான குற்றம் என்று நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் அதிரடியாகக் கட்டளை பிறப்பித்துள்ளது.

»11

## குருந்தூர்மலையில் இன்று பொங்கல்!

அணிதிரளுமாறு மக்களுக்கு அழைப்பு

முல்லைத்தீவு, ஓக. 18

முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் இன்றைய தினம் காலை 8 மணியளவில் பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதில் தமிழர்கள் பெருமளவில் கலந்து

»11

## குருந்தூர்மலையை பாதுகாக்க வருக!

சிங்களக் கிராமங்களில் சுவரொட்டி

முல்லைத்தீவு, ஓக. 18

முல்லைத்தீவு, குருந்தூர்மலை பௌத்த புனிதப் பிரதேசம் என்றும், அதன் புனிதத்தன்மையைப் பாதுகாப்பதற்காக இன்று வெள்ளிக்கிழமை குருந்தூர்மலைக்கு அணிதிரளுமாறும் முல்லைத்தீவின் சிங்களக் கிராமங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார்

»11

## ரவிகரன், இளஞ்செழியனுடன் பொலிஸார் கலந்துரையாடல்!

முல்லைத்தீவு, ஓக. 18

குருந்தூர்மலையில் பொங்கல் வழிபாடுகளுக்கு நீதிமன்றம் தடைபோட மறுத்துள்ள நிலையில், துரைராசா ரவிகரன் மற்றும் பீற்றர் இளஞ்செழியன் உள்ளிட்டோருடன் பொலிஸார் நேற்றுமாலை அவசரக்

»11

## விபத்தில் ஒருவர் இறப்பு!

வவுனியா, ஓக. 18

வவுனியா - ஈரப்பெரியகுளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

»11

## குருந்தூரில் பொங்குவதெப்படி? தொல்.திணைக்களம் வகுப்பு

- திறந்தவெளியில் பொங்கவேண்டும்
- தகரத்தின் மேல்தான் அடுப்பை வைக்கவேண்டும்
- வனத்துறையின் அனுமதி தேவை
- தொல்லியல் சின்னங்கள் மீது பூசைப்பொருள்களை வைக்கக்கூடாது
- தேங்காய் உடைக்கக்கூடாது, பால்தெளிக்கக்கூடாது

விரிவு- பக். 11

இம்முறை

## மருதமடு திருவிழாவில் மூன்று பக்தர்கள் பலி!

மன்னார், ஓக. 18

மன்னார் மடுத்திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர்களில் மூவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளனர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

»12

வவுனியாவில் பரிதாபம்

## மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கிச் சாவு!

வவுனியா, ஓக. 18

வலயமட்ட விளையாட்டுப் போட்டிக்கென வவுனியா பல்கலைக்கழக மைதானத்துக்குச் சென்ற மாணவர்கள் இருவர், மைதானத்துக்கு

»11

## துர்க்காதேவிக்கு இன்று கொடி

யாழ்ப்பாணம், ஓக. 18

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10

»11



வவுனியாப் பல்கலை மைதானத்தில்

## மாணவர்கள் உயிரிழப்பு விசாரணைக்கு உத்தரவு

வவுனியா, ஓக. 18

வவுனியாவில் விளையாட்டுப் போட்டிகளுக்காகச் சென்ற மாணவர்களில் இருவர் நீரில்

»12

நாகவிகாரையில் நேற்றுக் கலந்துரையாடல்

# குருந்தூர்மலையில் சிவாலயம் விகாராதிபதி அனுமதித்தாராம்

பொங்கலில் தமக்கு உடன்பாடுமில்லையாம்; மறவன்புலவு சச்சி பௌத்தத்துக்குக் காவடி

யாழ்ப்பாணம், ஓக. 18

குருந்தூர்மலையில் சிவாலயமொன்றைநிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் பௌத்த - இந்து அமைப்புகள் சில கூட்டாக அறிவித்துள்ளன.

»11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவம் முகாமிட்டுள்ளமை வடக்கு மக்களுக்கு விருப்பமாம்

## உதய கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, ஓக.18

**ஜனாதிபதியின் அழுத்தத்தைத் தொடர்ந்து எதிர்வரும் 6 மாத காலத்துக்குள் வடக்கில் 377 ஏக்கர் காணிகளை விடுவிக்க இராணுவம் இணக்கம் தெரிவித்துள்ளது. பிரிவினைவாதம் வடக்கு மாகாணத்தில் தோற்றம் பெற்றதால் ஏனைய மாகாணங்களைக் காட்டிலும் வடக்கு மாகாணத்திலேயே அதிகளவில் பாதுகாப்பு முகாம்கள் அமைக்கவேண்டும்.**

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதுல்கோட்டைப் பகுதியில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவ முகாம்களுக்காக கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 26 ஆயிரத்து 812 ஏக்கர் நிலப்பரப்பில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. போர் முடிவடைந்த பின்னரான காலப்பகுதியில் 22 ஆயிரத்து 919 ஏக்கர் நிலப்பரப்பு காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இராணுவத்தினர் வசமிருந்த காணிகளில் 85 சதவீதமானவை இது வரை விடுவிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டிய தேவை தமிழ் அரசியல்வாதிகளுக்கு காணப்படுகிறதே தவிர அந்தப் பிரதேசங்களில் வாழும் தமிழர்களுக்கல்ல, பருத்தித்துறையில் உள்ள இராணுவ முகாமை அகற்ற அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு எதிராக அந்தப் பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள் - என்றார். (எ-இ)

# நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவகால ஏற்பாடுகள்



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், மஹோற்சவ காலப்பகுதியில் சிறப்பு ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்ட செய்திக்குறிப்பில் உள்ளதாவது:

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு தொடக்கம் நல்லூர் ஆலயச் சுற்றுவீதிகளில் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டு செப்ரெம்பர் 16 ஆம் திகதியின் பின்னரே திறக்கப்படும்.

வீதி மூடப்பட்டிருக்கும் வேளை, பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் மாற்றுப் பாதையாக யாழ். மாநகரசபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து நாவலர் வீதி ஆனைப்பந்தி சந்தி ஊடாக யாழ். நகரை அடைய முடியும்.

வீதித்தடைப் பகுதியுள் வசிக்கும் மக்களுக்கும், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கும் அவர்களது வாகனங்களுக்கான போக்குவரத்து அனுமதி அட்டை மாநகரசபையால் வழங்கப்படும்.

சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடைப் பகுதிகளினுள் எந்தவிதமான வியாபார, விளம்பர நடவடிக்கைகளையும் மேற்கொள்ளமுடியாது.

ஆலய வெளி வீதியில் சிவப்பு, வெள்ளைக் கொடி கட்டப்பட்ட புனிதப் பகுதிக்கு வெளியாக, வீதித்தடைகளுக்கு உட்புறமாகவுள்ள வியாபார நிலையங்களில் பொருள்களை ஏற்றி இறக்க பிற்பகல் ஒரு மணிதொடக்கம் பிற்பகல் 2.30 வரையும் இரவு 10 மணிக்குப் பின்னரும் அனுமதிக்கப்படும்.

சிறுவர்களை பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலயச் சூழலில் ட்ரோன் கமராக்களை பயன்படுத்தி காணொலி பதிவுசெய்ய முடியாது.

ஆலயச் சூழலில் பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு நேர்த்திக்கடன்களை நிறைவேற்ற வரும் தூக்குக்காவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் ஆலயச் சூழலில் கண்காணிப்புக் கமராக்களும் பொருத்தப்படவுள்ளன.

அடியார்கள் ஆசார சீலர்களாக கலாசார உடைகளை அணிந்து ஆலயத்துக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது- என்றுள்ளது. (ச-இ)

# இனவழிப்புத் தீர்மானத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றுக

## இந்தியாவிடம் நாடு கடந்த தமிழீழ அரசு கோரிக்கை

கொழும்பு, ஓக.18

இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு எதிராக 2009ஆம் ஆண்டு புரியப்பட்ட சர்வதேசக் குற்றங்களை இனவழிப்பு எனப் பிரகடனப்படுத்தும் தீர்மானமொன்றை நிறைவேற்ற வேண்டும் என்று இந்திய நாடாளுமன்றத்தை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கோரியுள்ளது.

இந்தியாவின் உள்துறை அமைச்சர் அமித் ஷாவால் கடந்த மாதம் 28 ஆம் திகதி பேரணியொன்றில் தெரிவிக்கப்பட்ட கூற்றின் அடிப்படையிலேயே நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இந்தியக் காங்கிரஸும், திராவிட முன்னேற்றக் கழகமும்ஆட்சியிலிருக்கும்போதே இலங்கைத் தீவில் தமிழர்களின் இனவழிப்பு இடம்பெற்றது என்று அமித் ஷா குறிப்பிட்டிருந்தார். அதன் பின்னர் காங்கிரஸ், தி.மு.க.வின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஆட்சியின்போதே இலங்கையில் தமிழர்களின் இனவழிப்பு இடம்பெற்றது என்றும், தமிழ்நாட்டின் மீனவர் அதிகம் பாதிக்கப்பட்டனர் என்றும் அமித் ஷா ருவிற்றரில் பதிவொன்றும் இட்டிருந்தார்.

தமிழர்களுக்கெதிராக இலங்கையால் மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்கள் இனஅழிப்பு என இந்திய நாடாளுமன்றத் தீர்மானமொன்றின் மூலம் நிறைவேற்றுவதானது இலங்கைத் தீவில் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்காக அரசியல் தீர்வு ஒன்றுக்கு குறிப்பிடத்தக்களவு பங்களிக்கும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் நம்புகின்றது.

இவ்வாறான தீர்மானம் சர்வதேச ரீதியில் இந்தியாவின் மதிப்பை உயர்த்துவதுடன், மனித உரிமைகள், சர்வதேச ஒழுங்கு, சட்டம், பொறுப்புக்கூறலைப் பேணுவதில் ஜனநாயக பண்புடைய நாடாக இந்தியா கணிக்கப்படும்.

இதேவேளை உண்மையைக் கூறியமைக்காக அமித் ஷாவை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வாழ்த்துகிறது என்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# போதையில் இறுதி ஊர்வலம்; பொலிஸ் நிலையத்தில் சடலம்

கொழும்பு, ஓக. 18

இறுதி ஊர்வல வாகனத்தை மதுபோதையில் செலுத்திச் சென்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சாரதியுடன் சடலத்தையும் சேர்த்து பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்ட சம்பவம் பொரளையில் நடந்துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பொரளை சந்தியில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், கவனக்குறைவாக செலுத்திச் சென்ற இறுதிஊர்வல வாகனத்தை மறித்தனர்.

வாகனத்தை நிறுத்திய சாரதி தள்ளாடியபடி சென்றபோது அவர் மதுபோதையில் இருந்தமை கண்டறியப்பட்டது. பொலிஸார் சாரதியை கைது செய்து அவர் செலுத்தி வந்த இறுதி ஊர்வல வாகனத்தையும் பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றனர். அங்கு பொலிஸார் வாகனத்தைச் சோதனையிட்டபோது வாகனத்தில் சடலம் இருப்பதை அறிந்து அதிர்ந்தனர்.

உடனடியாக மலர்ச்சாலைக்கு அழைப்பு எடுத்து மற்றொரு இறுதி ஊர்வல வாகனத்தை வரவழைத்து சடலத்தை வைத்து அனுப்பி வைத்தனர். (ச-இ)

*வறட்சி உக்கிரம்*

# குறைந்து செல்கிறது நீர்த்தேக்க நீர்மட்டம்

கொழும்பு, ஓக. 18

நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக நாட்டிலுள்ள 73 பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்க்கொள்ளளவு 29 வீதம் வரை குறைவடைந்துள்ளது என்று நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சமனலவாவி நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 2.5 வீதமாகக் குறைந்துள்ளது. சமனலவாவியில் இருந்து நீர் விநியோயம் இடம்பெறும் உடவளவ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டமும் 2.8 வீதமாக உள்ளது.

அதேவேளை நாட்டில் பல மாவட்டங்களிலும் குடிதண்ணீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை தெரிவித்துள்ளது.

வறட்சியால் அதிகளவு பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த 75 ஆயிரம் பேர் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். அனைத்து வன விலங்குகளும் தண்ணீரின்றி அலைந்து திரிகின்றன. (ச-இ)

# வவுனியாவில் கடும் வறட்சி 450 குடும்பங்கள் பாதிப்பு!

வவுனியா, ஓக. 18

நிலவிவரும் வறட்சியுடன் கூடிய காலநிலையால் வவுனியா மாவட்டத்தில் 450 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 120 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வவுனியா இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஏ.எம்.ரூவான் ரட்நாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் வறட்சிப் பாதிப்பு அதிகளவில் பதிவாகியுள்ளது. வவுனியா வடக்கு வெடிவைத்தகல் கிராமத்தில் 450 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 120 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் குடிதண்ணீரின்றி அவதியுறுவதினால் குடிதண்ணீர் விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ச-ரி2, 110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் வேலைவாய்ப்பு தொழிற்சந்தை நாளை

யாழ்ப்பாணம், ஓக. 18

**மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட தொழில் நிலையத்தால் பட்டதாரிகள் மற்றும் ஏனைய தகைமை உடைய தொழில் தேடுவோருக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் தொழிற்சந்தை நாளை சனிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.**

தொழிற்சந்தையில் 50க்கும் மேற்பட்ட தொழில்வழங்கும் நிறுவனங்கள் பங்கேற்று தமக்கான ஆளணியினரைத் தெரிவு செய்யவுள்ளன.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள், கணினித் துறை, ஹோட்டல் முகாமைத்துவம், கணக்கியல், ஆடைத் தொழில், ஊடகத்துறை, காப்புறுதித்துறை, நிர்மாணத்துறை, சிறுதொழில் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு நிறுவனங்கள், அரச தொழிற்பயிற்சி நிறுவனங்கள், தனியார் மருத்துவத் துறை உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளன.

வேலைவாய்ப்பற்ற இளையோர் இந்தத் தொழிற்சந்தையில் பங்கேற்று தமக்கான தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு மாவட்ட தொழில் நிலையத்தில் நேரடியாகவோ அல்லது 021 221 9359 என்ற இலக்கத்தினூடாகவோ பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ்.மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது. (ச)

## இரட்டைக்கொலைக்கு பயன்படுத்திய வாகனங்கள் மீட்பு

வவுனியா தோணிக்கல்லில் இடம்பெற்ற இரட்டைக்கொலைக்கு சந்தேகநபர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் வாகனங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளன என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் வன்முறைக் கும்பலொன்று வீடொன்றில் புகுந்து தாக்குதல் நடத்தியதில் பலர் காயமடைந்ததுடன் கணவனும் மனைவியும் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக கைதுசெய்யப்பட்ட பிரதான சந் தேகநபர் உட்பட ஆறு பேர் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குற்றச்செயலுக்குப் பயன்படுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் வாகனங்கள் மறைத்துவைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட் டுள்ளன. பிரதான சந்தேகநபருக்குச் சொந்தமான டிப்பர், பட்டா ரக வாகனம் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள் என்பனவே மீட்கப்பட்டன. அவற்றை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-ரி2)

## விளையாட்டுத்துறை மேம்பாடு வவு. பல்கலையில் ஒப்பந்தம்

யாழ்ப்பாணம், ஓக. 18



விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்துக்கான ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வவுனியா பல்கலைக்கழகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

சிறந்த விளையாட்டு வீர, வீராங்கனைகளை உருவாக்கும் நோக்கில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரி. மங்களேஸ்வரன் மற்றும் குட்வில் நிறுவனத்தின் ஸ்தாபகர் குசல் குணசேகர ஆகியோர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். (ச-ரி2,27,110)

## தெளிவற்ற வாகன இலக்கம் மீளப்பொறிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 18

சேதமடைந்த அல்லது தெளிவற்ற வாகன இலக்க அடிச்சட்ட இலக்கங்களை மீளப் பொறித்தல் தொடர்பான நடவடிக்கைகள் யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகள் எதிர்வரும் 25 ஆம் மற்றும் 26 ஆம் திகதிகளில் யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன. தேவையுடையோர் யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் முற்பதிவு செய்து வரவேண்டும்.

வருகைதரும்போது தமது மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றை எடுத்து வந்து வாகன அடிச்சட்ட இலக்கங்களை மீளப்பொறித்துக் கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச -27)

# எப்பாகத்திலும் சேவையாற்ற அரச அலுவலர்கள் முன்வருக!

### யாழ்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

அரச அலுவலர்கள் சமூக சிந்தனையுடனும் சேவை மனப்பாங்குடனும் நாட்டின் எந்தப் பாகத்திலும் வேலை செய்யத் தயாராக தம்மை நிலைப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று யாழ்.மாவட்டச் செயலர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கருத்துரைத்ததாவது:-

அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டால் ஏதாவது ஒரு வழியில் மருத்துவச் சான்றிதழை எடுத்து வருகின்றார்கள். யாழ். நகரினுள்ளும் அயற்பகுதிகளுக்குள் கடமையாற்றுவதே அவர்களது சிந்தனையாக காணப்படுகிறது.

அரச பணிக்கான நியமனக் கடிதத்தின் இரண்டாவது விடயம் இலங்கைத் தீவின் எப்பாகத்திலும் வேலை செய்யவேண்டும் என்பதாகும். நம்மவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள தீவுக்குள்ளேயே வேலை செய்யத் தயக்கமடையும் நிலையில் எவ்வாறு இலங்கையின் எப்பாகத்திலும் வேலைசெய்வர்? எனவே அரச அலுவலர்கள் சமூக சிந்தனையுடனும் சேவை மனப்பாங்குடனும் செயற்பட வேண்டும், எந்தப் பாகத்திலும் வேலை செய்யத் தயாராக வேண்டும் - என்றார். (ச-125)




**படிக்கிறது தேவாரம், இடிக்கிறது சிவன் கோயில் எண்டுற பழமொழி ஆருக்குப் பொருந்துதோ இல்லையோ உந்தச் சீலம்பாய் சிலோன் சிவசேனைக்கும், அதின்ர தலைவர் சச்சிக்கும் நல்லாவே பொருந்துது. காவியைக் கட்டிக்கொண்டு இஞ்சயிருக்கிற சைவத்தை கருவறுக்கிற வேலையைத்தான் உவையள் செய்து கொண்டிருக்கினமெண்டதுக்கு நேற்று ஆரியகுளம் விகாரையில நடந்த 'மச்சப் பார்ட்டி' நல்ல உதாரணம்.**

**குருந்தூர்மலை, பறாளாய் முருகன் அரசமரம் எண்டு ஊரிப்பட்ட பிரச்சினையள் நடந்துகொண்டிருக்கேக்க, அதுகளை எங்களுக்க இருக்கிற எட்டப்பர் கூட்டத்தை வைச்சே மடைமாத்துற வேலையளை அரசாங்கம் 'அந்தமாதிரிச்' செய்துகொண்டிருக்கு. அப்பிடி அரசாங்கம் எள் எண்டு சொல்லமுதலே வள்ளெண்டு குலைச்சுக்கொண்டு எண்ணெயாக்கிற வேலையைச் செய்யிறதில முன்னுக்கு நிக்கிறது உந்தச் சிலோன் சிவசேனையும், அதைக் கொண்டு நடத்திற சச்சியரும்தான். அதால இந்தமுறையும் எப்பிடி இந்தக் குருந்தூர், பறாளாய் விசயங்களை திசை திருப்பலாம் எண்டு பிளான் போட போன திங்கட்கிழமை சச்சியர், ஆரியகுளம் விகாரைக்கு நைசா போயிருக்கிறார். ஆர் ஆரெல்லாம் பழைய செருப்புக்கே பல்லிளிக்கக்கூடிய ஆக்கள் எண்டு லிஸ்ட் போட்டு, 'அவையைக் கூப்பிட்டு, நல்ல சாப்பாடு குடுத்தால் நாங்கள் சொன்னமாதிரி கூவுவினம்' எண்டு சச்சியர், பிக்குவுக்கு அண்டைக்கே ஐடியா குடுத்திட்டுத்தான் வெளியில வந்தவர். ஆனால் அவரின்ர கெட்டநேரம் ஆள், பட்சியின்ர பார்வைக்குள்ள பட்டிட்டார். உடன 'ஆரியகுளம் பிக்குவுக்கு சுகமில்லை, அதுதான் பார்க்க வந்தனான்' எண்டு சளாப்பிட்டுப் போட்டார்.**

**அண்டைக்கு பிள்ளையார் சுழி போட்ட சதிக்கூட்டம் நேற்று பிளான் பண்ணினபடி 'பழைய செருப்புக்கே பல்லைக்காட்டுற' கூட்டத்தோட நடந்திருக்கு. முந்தி ஆளுநரா இருந்த ஜீவனுக்கு, கண்டியன் டான்ஸைக் கூட்டிக்குடுத்த 'மோகன'மானவர்தான் இந்தக் கூட்டத்துக்கு ஆள்பிடிவேலை பார்த்தவராம். இப்பிடிக் கூட்டிக்குடுக்கிறது, ஆள்பிடிக்கிறது எண்டு அடிமைச்சேவகம் செய்யிறதெண்டால் இந்த மோகனமானவருக்கு அப்பம் சாப்பிடுறமாதிரி. கூட்டத்துக்கு வந்தவைக்குத் தண்ணி வெந்நி எல்லாம் குடுத்து ஆமிக்காரர்தான் விழுந்து விழுந்து கவனிச்சிருக்கினம். பௌத்த - இந்து அமைப்புகள் எண்டு சொல்லிக் கூட்டம் நடந்தாலும் பிக்குகள் நினைச்சபடி தான் கூட்டம் நடந்தது. அதாலதான் கூட்டத்துக்குப் போனவைக்கு எல்லாம் மீன் சாப்பாடு குடுபட்டிருக்கு. சிலர் தான் சாப்பிடேலையாம். மற்றவையெல்லாம் மீன் சாப்பாட்டை ஒருபிடி பிடிச்சிட்டு வந்துதான் 'குருந்தூரில சிவன் கோயில்கட்ட அனுமதி. ஆனால் பொங்கல் வைக்கிறது சரியில்லை' எண்டு ஏவுறை விட்டவை.**

**குருந்தூர்மலை பொங்கலை திசைதிருப்பத்தான் இப்பிடி சட்டுபுட்டெண்டு மீன் சாப்பாட்டோட கூட்டத்தை வைச்சிருக்கினம் எண்டது அவையின்ர வாயில இருந்து வந்த வார்த்தையளே காட்டிக்குடுத்திட்டு. எண்டாலும் 'சிவன் கோயில் கட்ட ஓமெண்டது நல்லதுதானே' எண்டு ஆரும் நினைப்பீங்கள். ஆனால் அதுக்குப் பின்னுக்கு கடும் ஆபத்து இருக்கு. அது என்ன? நாளைக்கு பட்சி சொல்லும்.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதநாட்டியம் அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 18

திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் மாணவியும் நாட்டிய கலாவித்தகர் ஸ்ரீமதி சுதர்சினி கரன்சனின் மாணவியுமான நியோமி வெலிஜியா வில்சனின் பரதநாட்டிய அரங்கேற்றம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலைத்தூது அழகியல் கல்லூரியின் உபஅதிபர் அருட்பணி செ. அன்புராசா அடிகள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக கரவெட்டி குருஷேத்திரம் நடனாலயத்தின் இயக்குநர் பேரின்பநாயகி சிவகுரு கலந்துகொள்ளவுள்ளார். (ச-ரி2)

# நல்லூர் மஹோற்சவத்தில் பஜனைகளுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 18

வரலாற்றுச் சிறப்புப்பெற்ற நல்லூர்க் கந்தனின் மஹோற்சவ காலத்தில் மாலை வர்களிடையே ஆன்மிக விழிப்புணர்வு மற்றும் பஜனை நிகழ்வுகள் என்பன வழமைபோன்று இம்முறையும் இடம்பெறும் என நல்லை ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

நல்லூர்க் கந்தனின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தினமும் முருகப்பெருமான் காலை, மாலை வீதிவலம் வரும்போது பஜனை நிகழ்வுகள் முன்னெடுக்கப்படும்.

பஜனையில் பங்குபற்ற விரும்புகின்ற பாடசாலைகள், ஆன்மிக சமய நிறுவனங்கள் மேலதிக விவரங்களை இல. 692, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்திலும் 077 222 0103 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவும் பெற்றுக்கொள்ளலாம் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ச-ரி3-27,125,66)

# குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஓக. 18

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ அமிர்தபாஷினி அம்பிகை உடனுறை வாரியப்பர்- வாரிவன நாதசுவாமி ஆலய மகா கும்பாபிஷேக கர்மாரம்ப நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மகாகும்பாபிஷேகமும் இடம்பெறவுள்ளன என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச)

# கிராம அலுவலர்கள் சங்கப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 18

வடக்கு - கிழக்கு மாகாண கிராமஅலுவலர்கள் சங்கப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதேச செயலகங்களில் பணியாற்றும் சங்கத்தின் அங்கத்தவர்களைப் பங்கேற்குமாறு சங்கத்தின் பொதுச்செயலாளர் வீ.செல்வகுமரன் தெரிவித்துள்ளார். (ச-ரி3-60)

# கட்டடத் திறப்பு நிகழ்வு இன்று

மாதகல், ஓக. 18

யாழ். மாதகல் சென். தோமஸ் றோமன் கத்தோலிக்கப் பெண்கள் பாடசாலையின் 143 வது ஆண்டு நிறைவு நிகழ்வும் புதிய இருமாடிக் கட்டடத் திறப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாடசாலை வளாகத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச-ரி3-66)

# நாகசதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், ஓக. 18

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாகசதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு விசேட பூசைகள், அபிஷேகங்கள் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-17)

# ரயில் விபத்துகளை தடுப்பதற்கு ஒருவழி

இப்போது நாங்கள் அடிக்கடி கேள்விப்படும் விபத்து என்றால் அது புகையிரதக் கடவைகளில் வாகனங்கள் மோதுண்டு அதனால் ஏற்படும் உயிரிழப்புகளும் சேதங்களும்தான். இதற்கு காரணம் சற்றுப் பொறுமையைக் கடைப்பிடிக்காத வாகனச் சாரதிகளும், அவர்களுக்குத் தெரியாத ஓர் உண்மையும்தான். வாகனமொன்று ஒரு புகையிரதத் தண்டவாளத்தைக் கடக்கும் போது சில சந்தர்ப்பங்களில் அதன் இயந்திரம் செயலிழந்து விடும். அப்படி நடந்துவிட்டால் அந்த வாகனத்தை உடனேயே 'ஸ்டார்ட்' செய்வது சாத்தியமாகாது.

இதற்கான விளக்கம் இதோ, ஒரு புகையிரதம் பயணித்துக் கொண்டிருக்கும்போது அதன் இயந்திரத்தில் இருந்து உருவாகும் ஒரு காந்த சக்தி ரயில் தண்டவாளங்கள் ஊடாக பல கிலோ மீற்றர் முன்னால் பயணித்துக் கொண்டிருக்கும். உதாரணமாக கே. கே. எஸ். இல் பயணித்துக் கொண்டிருக்கும் புகையிரதத்தின் காந்தசக்தி சுன்னாகம்வரை கூட பரவியிருக்கும். சரி, ஒரு வாகனம் சுன்னாகத்திலுள்ள கடவையைக் கடக்க முயல்கிறது. அந்த வாகனச் சாரதி மூன்றாவது அல்லது நான்காவது 'கியரி'ல் ரயில்கடவையைக் கடக்க முயன்றால், அவருடைய வாகனம் செயலிழந்துவிடக்கூடும்.




இதற்குக் காரணம் மேலே நான் குறிப்பிட்ட காந்தசக்தி , வாகன இயந்திரத்தின் சுழற்சியை நிறுத்தி விடுவது தான். அதன் பின்னர் எவ்வளவு முயன்றாலும் வாகனத்தை இயக்க முடியாது. இதனை உணராமல் அதன் சாரதி தொடர்ந்தும் 'ஸ்டார்ட்' செய்ய முயன்றால் அதன் பற்றரியும் பலவீனமாகி விடும். இந்தச் சூழ்நிலையில் அந்த வாகனத்தை முன்னோக்கி அல்லது பின்னோக்கித் தள்ளிக் கொண்டு போக முயலலாம் . அதனை அவர் தனியாகச் செய்ய இயலாது. அவருக்குப் புகையிரதம் வரக்கூடிய திசை தெரிந்திருந்தால் அந்தத் திசையில் ஓடிச் சென்று புகையிரத சாரதிக்கு சமிக்ஞை கொடுக்கலாம். இதுவும் எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பது சந்தேகம் தான். இதன்போது அந்தச்சாரதி செய்ய வேண்டிய - செய்யக்கூடிய - நடவடிக்கை என்னவென்றால் வாகனத்தை முதலாவது கியரில் போட்டு, 'செல்ப்ஸ்டார்ட்டை' ஒருமுறை மட்டுமே இயக்கவேண்டும். அதன்போது வாகனம் குலுங்கியவாறு சில அங்குலங்கள் முன்னால் நகரும், பின்னர் மீண்டும் ஒருமுறை 'செல்ப்ஸ்டார்ட்டை' இயக்க வேண்டும். இப்படி நான்கு அல்லது ஐந்துமுறை இயக்கும்போது அபாயமான இடத்தைக் கடந்து விடலாம்.

வாகனச் சாரதிகள் புகையிரதக் கடவையைக் கடக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய முறை கீழ்க்கண்டுள்ள வழிதான். புகையிரதக் கடவையை அண்மித்தவுடன் (புகையிரதக்கடவை திறந்திருந்தாலும் ) வாகனத்தை முற்றாக நிறுத்தவேண்டும். பின்னர் முதலாவது கியரில் போட்டு மெதுவாக முன்னேறலாம். இதன்போது வாகனச் சக்கரங்கள் நிலத்தில் அழுத்தமாகி, கவ்விப் பிடித்தவாறு பயணிப்பதுடன் வாகன இயந்திரத்தின் முழுச் சக்தியும் அதன் சக்கரங்களின் மேல் படிந்துள்ளதால், புகையிரதத்தின் காந்த சக்தியை முழுமையாக எதிர்க்காவிட்டாலும், அதன் நேரடித் தாக்கத்துக்கு அகப்படாமல் நழுவிப் போய்விடும். இதனைக் கடைப்பிடிப்பதனூடாக புகையிரதக்கடவை விபத்துகளைத் தடுக்க முன்வருவார்களா?

எஸ்.ஆனந்தராஜ்,
நவாலி தெற்கு, மானிப்பாய்

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள் வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படும். பொறுமை அவசியம்.

**இடபம்:** தேவையான பணம் கிடைக்கும். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**மிதுனம் :** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். அனுசரித்துச் செல்வது நல்லது.

**கடகம்:** சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். சிறுசிறு விவாதங்கள் ஏற்படலாம். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**சிம்மம்:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடிவது மகிழ்ச்சி தரும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். உறவுகளால் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். மகிழ்ச்சியான செய்தி கிடைக்க வாய்ப்புள்ளது.

**மீனம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## என்ன செய்யப் போகின்றன தமிழ்க்கட்சிகள்?

'இது நல்லிணக்கத்துக்கான நேரம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு முயற்சிகள் ஊடாக நல்லிணக்கத்தை எட்டுவதற்கு ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம். அதேவேளை ஒரு வாரத்துக்கு முன்னர் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தெளிவாகக் குறிப்பிட்டது போல அனைவரும் நன்கு அறிந்த குழப்பமான விடயங்களை போதுமான அளவில் தீர்த்து வைக்கும் வகையில் இந்தச் செயன்முறைகள் அமையும் என நாங்கள் நம்புகிறோம்' என்று ஓமடுத்திருத்தலத்தின் ஆவணித் திருவிழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய பாப்பரசரின் பிரதிநிதி பேராயர் பிறைன் உடைக்குவே ஆண்டகை தெரிவித்துள்ளார். சர்வதேச சமூகத்தின் பிரதிநிதி ஒருவரின் குரலாகவே அவரின் செய்தியைப் பார்க்கவேண்டும். அவரின் இந்தச் செய்தி பல்வேறு கேள்விகளை எழுப்பி நிற்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சர்வகட்சிக் கூட்டத்திலும் சரி அல்லது வடக்கு – கிழக்கு தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பிலும் சரி பங்கேற்ற தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும், 'ஜனாதிபதி ஏமாற்றுகின்றார், இந்தப் பேச்சுகளால் பயனில்லை, காலத்தை இழுத்தடிக்கின்றார்' என்ற குற்றச்சாட்டுகளை அடுக்கியிருந்தன. அதேவேளை ஜனாதிபதியின் நகர்வுகள் அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கானது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. இந்த விடயங்கள் பாப்பரசரின் பிரதிநிதிக்கு யாழ்ப்பாணம் அல்லது மன்னார் மறை மாவட்ட ஆயர்களால் எடுத்துச் சொல்லப் படவில்லையா? போரின் பின்னரான காலகட்டத்தில் தமிழ்த் தேசியத்துக்கு உரமூட்டும் வகையில் யாழ். மற்றும் மன்னார் மறை மாவட்ட ஆயர்கள் கடந்த காலத்தில் குரல் கொடுத்திருந்தனர். பாப்பரசரின் பிரதிநிதி ஜனாதிபதிக்குக் கொடுத்த அங்கீகாரம் – வரவேற்பு – அந்தக் குரல்கள் தேய்ந்து வருகின்றனவா என்ற சந்தேகத்தை எழுப்பி நிற்கின்றது. அதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு வேண்டியதை அடைந்துவிட்டார். அவரைப் பொறுத்தவரையில் 13ஆவது திருத்தம் தொடர்பில் தெற்கில் குழப்பம் ஏற்படவேண்டும். அதை நடைமுறைப்படுத்தாமல் விட்ட பழி தன்மீது வந்து விழக்கூடாது. அதற்காக நாடாளுமன்றம் பலிக்கடாவாக்கப்பட்டுள்ளது. அதே போன்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசுவதாகக் காண்பித்து சர்வதேச சமூகத்துக்கு போக்குக்காட்டவேண்டும். ஆனால் எந்தவொரு விடயமும் நடந்தேறிவிடக்கூடாது. அவர் எதிர்பார்த்ததைப் போன்று தான் எல்லாம் நடந்தேறியிருக்கின்றது.


சர்வதேச சமூகமும் ரணிலை சமாதானத்தின் தூதுவராக வர்ணிக்கும் நிலைமையே தோன்றியிருக்கின்றது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு அவருக்குச் சிறந்த முதலீடு இது. பாப்பரசரின் பிரதிநிதியின் உரையை, ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டிருப்பதன் ஊடாக அது வெளிப்படையாகவே தெரிகின்றது.

ஜனாதிபதியுடனான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பேச்சாக இருக்கலாம், சர்வகட்சிப் பேச்சாக இருக்கலாம், இவை எவற்றிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கலந்து கொள்ளவில்லை. 'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தரப்புடன் பேசி எந்தவொரு விடயங்களையும் நிறைவேற்ற மாட்டார். மாறாக அதனைப் பயன்படுத்தி சர்வதேசசமூகத்தின் முன்பாக மாபெரும் விடயத்தை ஒப்பேற்றுவதாகக் காண்பிப்பார். அவரின் பித்தலாட்டத்துக்கு உடன்பட முடியாது' என்று குறிப்பிட்டே அந்தக் கட்சி இதில் பங்கேற்றிருக்கவில்லை. கண்முன்னே நடப்பதைப்பார்க்கும்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பித்தலாட்டத்தை சர்வதேசசமூகம் ஏற்றுக்கொண்டு அங்கீகரிப்பதாகவே இருக்கின்றது. இனியும் தொடர்ச்சியாக ரணிலின் ஏமாற்று நாடகத்தில் தமிழ்க் கட்சிகள் நடிகர்களாகப் பங்கேற்கப்போகின்றார்களா? அல்லது முன்னணி செய்வதைப் போல ரணிலின் உண்மை முகத்தை தோலுரித்துக்காட்டப்போகின்றார்களா?

### நாளொரு நல்வார்த்தை

"உன்னை யாரோடும் ஒப்பிட்டுக் கொள்ளாதே. எந்தச் சூழ்நிலையிலும் தன் இடத்தைவிட்டு ஓடாத தாவரமாக நீ இரு"

– எஸ்.ராமகிருஷ்ணன்





## 13 ஆவது திருத்தத்தை மக்கள் கோரவில்லை

கொழும்பு, ஓக.18

நாட்டு மக்கள் புதிய அரசமைப்புச் சட்டத்தையோ, தேர்தலையோ அல்லது 13ஆவது திருத்தச் சட்டத்தையோ கோரவில்லை. சுதந்திரமாக வாழ்வதற்கான வசதிகள் மற்றும் சூழ்நிலைகளையே மக்கள் கோருகின்றனர் - இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

காலி பிரதேச செயலாளர் அலுவலகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பல்வேறு தரப்பினரால் அழிக்கப்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரத்தை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தற்போது மீண்டும் கட்டியெழுப்பி வருகின்றது. சர்வதேச அமைப்புகள் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இதனைப்பார்த்துக்கொண்டு இருக்க முடியவில்லை என்பதால், தேர்தல், அரசமைப்புச் சட்டம் மற்றும் திருத்தச் சட்டங்கள் பற்றிப் பேசி வருகின்றனர். இவர்கள் மக்களை மேம்படுத்த அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களை சீர்குலைக்க தருணம் பார்த்துள்ளனர். அனைத்துத் துறைகளிலும் வீழ்ச்சியடைந்திருந்த நாடு தற்போது தலைநிமிர்ந்து வருகிறது. அனைத்துச் சூழ்ச்சிகளையும் மக்கள் தோற்கடித்து வருகின்றனர். மக்களை மேம்படுத்தி, நாட்டை கட்டியெழுப்பிய பின்னர், தேர்தலை நடத்த அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது - என்றார். (எ-இ)

## அமைச்சுப் பதவி வழங்கவே 13 தொடர்பாக ரணில் பேச்சு

*சரித்த ஹேரத் எம்.பி. குற்றச்சாட்டு*

13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பான யோசனை ஊடாக மாகாணசபைகளுக்கு அதிகாரங்களுடன் கூடிய அமைச்சுப் பதவிகளை அறிமுகப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார். மொட்டுக்கட்சியைச் சேர்ந்த 45 பேருக்கு அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொடுக்கவே அவர் இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளார். - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி தனது செயற்பாடுகள் மூலம் எண்ணக்கரு ரீதியிலான ஏமாற்றுத் திட்டத்தை முன்வைத்துள்ளார். இதற்கு முன்னர் எண்ணிக்கை தொடர்பான ஏமாற்றுத் திட்டங்களே நாட்டில் இருந்தன. அதையும் ஜனாதிபதி தற்போது புதுப்பித்துள்ளார். ஜனாதிபதி மக்கள் ஆணையின்றி செய்து வரும் வேலைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் - என்றார். (எ-இ)

நல்லிணக்க முயற்சி

## இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிப்பு!

கொழும்பு, ஓக.18

அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளிநாட்டு இராஜதந்திரப் பிரிவினருக்கு விளக்கமளித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்த்தன ஆகியோர் வெளிவிவகார அமைச்சில் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்தனர்.

நல்லிணக்கத்தைக் கையாளும் உள்நாட்டு நிறுவனங்களின் தலைவர்களும் கலந்துரையாடலில் கலந்து கொண்டதுடன், அவர்கள் தமது பணிகள் தொடர்பாக இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்தனர். (எ-இ)

### நாளை

19.08.2023 சனிக்கிழமை ஆவணி 02

சுபநேரம் : 03.05 – 04.35

ராகுகாலம் : 09.05 – 10.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'புலமைப் பரிமாணம்' நல்லூரில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 18

சுன்னாகம் அ.குமாரசாமிப்புலவரின் அமரத்துவ நூற்றாண்டு நிறைவையொட்டி 'புலமைப் பரிமாணங்கள்' எனும் விடயப்பொருளில் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 முதல் மாலை 5 மணி வரை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலர் அ. சிவபாலசுந்தரம் பங் கேற்கவுள்ளார்.

நிகழ்வில் புலவர் சிறப்புகள் பற்றி கருத்துரைக்கப்படவுள்ளன என்று ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-ரி2)

# மகோற்சவம்

சாவகச்சேரி செருக்கல்பதி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்து டன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் மகோற்சவ குரு சிவஸ்ரீ இலட் சுமிகாந்த ஜெயதீசக்குருக்கள் தலைமையில் உற்சவங்கள் இடம்பெறவுள்ளன.

அதற்கமைய எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கி ழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன என்று ஆலய தர்மகர்த்தா அறிவித் துள்ளார். (ச-இ)



# கௌரவிப்பு

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட தமிழ்த் தின இலக் கணப் போட்டியில் தேசிய மட்டத்தில் யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகா வித்தி யாலய மாணவி வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார்.

மேற்படி மாணவியைக் கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் இ.சுபதீஸ்வரன் தலைமை யில் பாடசாலை பிரதான மண்டபத் தில்கடந்த 10 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபா லசுந்தரன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் யோன் குயின்ரஸ் ஆகி யோர் கலந்துகொண்டு மாணவிக்கு பொன்னாடை போர்த்தி தங்கப் பதக்கங் கள் கேடயங்கள் என்பவற்றை வழங்கி கௌரவித்தனர். (ய-27)

# சித்தி விநாயகர் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ ஸ்ரீ சித்தி விநாய கர் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 6.15 மணி முதல் 7.30 மணிவரையான காலப்பகுதியில் இடம்பெறவுள் ளது.

அதற்கமைய இன்று வெள்ளிக் கிழமை காலை 7.30 மணி முதல் விநாயகர் வழிபாட்டு கிரி யைகள் இடம்பெற்று நாளை சனிக்கிழமை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும்.

எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் செப்ரெம்பர் மாதம் 3ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை வரையான 14 நாள்கள் மாலை 3 மணிமுதல் 5 மணிவரை மண்டலாபிஷேகமும் மறுநாள் 4 ஆம்திகதி காலை 8 மணிக்கு சங்காபிஷேகமும் இடம்பெற வுள்ளது. (ச)


## பாதுகாப்பு உத்தியோகத்தர் வேலைவாய்ப்பு - யாழ்.மாவட்டம்

எமது பாதுகாப்பு சேவை நிறுவனம் பாதுகாப்பு கடமைகளுக்காக யாழ். நகர பகுதியில் வேலை செய்யக்கூடியவர்களை ஆட்சேர்ப்பு செய்கின்றது.

ஆர்வமுள்ள நல்ல தேக ஆரோக்கியமும் நற்பழக்க வழக்கம் உள்ளவர்கள் தங்களது வேலைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

**முகவரி : 114, செம்மணி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

**பொறுப்பதிகாரி : சின்னையா பாலதாஸ்**

தொலைபேசி இலக்கம்: **077 539 6350**
**076 216 1115**
**077 239 2850**

**அங்கர் செக்குறிட்டி சேர்விஸ்**
**யாழ்ப்பாணம்.**

(CS 258024-1)

## 5 th MR. NORTHERN 2023

BODYBUILDING & FITNESS CHAMPIONSHIP

வட மாகாண ஆணழகன் போட்டி

*To be held at*



Date : 19.08.2023 (saturday)

Venue : Saraswathy Hall
(A1 Rajah Cream House)
(37, Sri.Pon - Ramanathan Road, Jaffna.)

Time :
03.30 pm - 08.30 pm

*Thanks for coming*

presidant


## கேள்வி அறிவித்தல்

### சபைநிதி -2023

### புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வட மாகாணம்.

01. சபைநிதி 2023 மூலமான அபிவிருத்தி ஒதுக்கீட்டின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களிற் காக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
04. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாத வராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான C9/C8/ C7 தரத்தில் வீதி அமைப்பிற்கான CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு (தொலைபேசி: 021 229 1023 e.mail – pkipsmullai@gmail.com ) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணி வரை 31.08.2023 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு எனும் இடத்திலிருந்து 18.08.2023 ஆம் திகதியிலிருந்து 31.08.2023 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 3000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு எனும் முகவரிக்கு 01.09.2023 ஆம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும்.
09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (17.11.2023) நாட்கள் வரை செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். இத் தொகையினை வங்கிப் பிணையாக மாத்திரம் செலுத்த முடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(04)/Coun./Cap./W-08/2023 | THE IMPROVEMENT OF VEHICLEW PARK ROAD (LEFT SIDE) IN THIRUMURUKANDY TEMPLE AREA | 3.08 | 60 நாட்கள் | C9/C8/C7 | 50,000.00 | 15/12/2023 |
| NP/14/44(04)/Coun./Cap./W-09/2023 | THE RENOVATION OF NEELAN ROAD (ULAKALANTHAPILLAIYAR NEAR ROAD) | 2.43 | 60 நாட்கள் | C9/C8/C7 | 40,000.00 | 15/12/2023 |
| NP/14/44(04)/Coun./Cap./W-10/2023 | THE REPAIRING WORK OF PANDIYAN ROAD | 3.17 | 60 நாட்கள் | C9/C8/C7 | 50,000.00 | 15/12/2023 |
| NP/14/44(04)/Coun./Cap./W-11/2023 | THE RENOVATION OF ALADY NAGAMPAL ROAD (PUTHUKKUDIYIRUPPU MARKET BACK ROAD) | 1.73 | 60 நாட்கள் | C9/C8/C7 | 30,000.00 | 15/12/2023 |
| NP/14/44(04)/Coun./Cap./W-12/2023 | RENOVATION OF 1ST LANE WARD NO – 6 | 2.43 | 60 நாட்கள் | C9/C8/C7 | 40,000.00 | 15/12/2023 |
| NP/14/44(04)/Coun./Cap./W-13/2023 | THE RENOVATION OF VIDIYAL SPORTS CLUB ROAD AND THE CONSTRUCTION OF 610MM DIAL HUME PIPE CULVERT | 1.76 | 60 நாட்கள் | C9/C8/C7 | 30,000.00 | 15/12/2023 |
| NP/14/44(04)/Coun./Cap./W-14/2023 | THE RENOVATION OF THIRUMUKAPURAM KIRAVAL ROAD, MALLIKAITHIVU ANTHONIYAR 5TH CROSS ROAD, MANTHUVIL PLAY GROUND ROAD, RENOVATION OF JOHN TUTION CENTRE 3RD CROSS ROAD AND THE CONSTRUCTION OF 610MM LONG HUME PIPE CULVERTS | 2.43 | 60 நாட்கள் | C9/C8/C7 | 40,000.00 | 15/12/2023 |

11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு அலுவலக கட்டடத்தில் 25/08/2023 அன்று மாலை 02.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தச்செலவில் கலந்து கொள்ள முடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிரதேசசபை பெறுகைக்குழு**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு**
18.08.2023

(cr 39908) (N-1)


## கண்ணீர் அஞ்சலி



**திருமதி சிங்கராசா மரியமீனம்மா (கனகம்மா)**

ஒட்டகப்புலத்தை பிறப்பிடமாகவும் கனடாவை தற்போதைய வதிவிடமாகவும்
கொண்டவரும் சாந்தினி, தங்கன், சறோயினி, வசந்தினி ஆகியோரின்
தாயாரும் ஆவார்

காலங்கள் உருண்டோடினாலும் மறப்போமா
உம் அன்பை
எம் தாய்க்கு நிகராக எம்முடன் இருந்த அந்த
நாட்களை மறவோம் அம்மா
ஆண்டுகள் பல கடந்தாலும் எம்மை விட்டு அகலா உம் நினைவுகள்

**உங்கள் ஆன்மா சாந்தியடைய ஒட்டகப்புல அன்னையை வேண்டிநிற்கிறோம்.**

**மேரி, பிள்ளைகள் குடும்பம்,**
**ராஜ் வெதுப்பகம்,பண்டத்தரிப்பு**

(CS 25987) M-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## இராமசாமி சண்முகசுந்தரம் (Shan)

(ஆங்கில ஆசான், Bachelor Of Arts in Social Science, Dip. in English SP- Trd in English Delic Trd.)



**தோற்றம்** 26.11.1955 **மறைவு** 16.08.2023

குரும்பகட்டி, புலோலி வடமேற்கினைப் பிறப்பிடமாகவும், துறையாமூலை, புலோலி வடமேற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி சண்முகசுந்தரம் (சண்) (யா/ நாகர்கோவில் மகாவித்தியாலயம், யா/ விக்னேஸ்வராக் கல்லூரி, யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்) நேற்றுமுன்தினம் (16.08.2023) சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி - நற்குணம் தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற சிவராசா - சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும், வசந்தினியின் பாசமிகு கணவரும், கோபிராம் (இலங்கை வங்கி தலைமைச் செயலகம் - கொழும்பு), கோரட்சன் (கனடா), லோஜிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - மருதங்கேணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரசாந்தி (ஆசிரியை - கொழும்பு), சிந்துஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுஷின் (கனடா) பாசமிகு அருமைப் பேரனும், இந்திராணி (ஓய்வுபெற்ற தாதிய சகோதரி - யாழ்), மங்களநாயகி (ஓய்வுபெற்ற தாதிய சகோதரி - வவுனியா), கிருஸ்ணானந்தன். ( ஆசிரியர் - வவுனியா), பாலேந்திரன் (கனடா), காலஞ்சென்ற ஸ்ரீபத்மநாதன் (வட பிராந்திய போக்குவரத்து சபை - பருத்தித்துறை), நவரட்ணம் (லண்டன்), கருணாநிதி (பதிவாளர் நாயகத் திணைக்களம் - யாழ். MSO -1), பத்மராஜன் (ஓய்வுபெற்ற பொதுமுகாமைத்துவ உத்தியோகத்தர், காணிப்பதிவாளர் - யாழ்.), ஜெயந்தி (முன்பள்ளி ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு அண்ணாவும், சாந்தினி (கொலண்ட்), சிவேந்தினி (பிரான்ஸ்), சறோஜினி (இலங்கை), நந்தினி (பிரான்ஸ்), யோகேந்தினி (இலங்கை), பரமானந்தன் (பிரான்ஸ்), சிவானந்தன் (லண்டன்), உதயகிருஸ்ணானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், P.E.Centre உபயகதிர்காமம், C.M.E பருத்தித்துறை, B.CON உடுப்பிட்டி., டால்ரன் கரவெட்டி, சதாப் பொன்ஸ் - மாலுசந்தி, ஆதிரையான் திக்கம், ரோகினி அக்கடமி - வதிரி, வேலும்மயிலும் அறக்கட்டளை நிலையம் - பருத்தித்துறை, கேம்பிரிச் கலாசாலை, நவிண்டில் கல[illegible] கல்வி நிலையம், புட்டளை ஆகிய தனியார் கல்வி நிறுவனங்களில் ஆங்கில ஆசானுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (18.08.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

**077 755 5542** (24734)AH-1 **தகவல்: குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## சங்கீதபூசணம் உயர்திரு. செல்லத்துரை குமாரசாமி

**Dip-in-Ed, Sp.Tr.(Music)-SLES-I**

**(பூத்த கொடிபுகழ்) சங்கீதபூசணம் (அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)**



**தோற்றம்** 10.01.1951 **மறைவு** 16.08.2023

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னைநாள் ஓய்வுபெற்ற பிரதி அதிபரும், விரிவுரையாளரும், பகுதி நேர விரிவுரையாளர் நுண்கலைப்பீடம் யாழ். பல்கலைக்கழகம், போதனாசிரியர் தொலைக்கல்வி நிலையம் வடமாராட்சி, பிரதம தேர்வாளர் வடஇலங்கை சங்கீதசபை, ஆசிரியர் வினாத்தாள் தயாரிப்பாளர் இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஈழத்து சீர்காழி, இசைமாமேதை, ஈழத்துப் புரட்சிப் பாடகர்-ஞானபண்டித இசையரசு, கலைக்குரிசில், கலைவாரிதி, யாழ்முத்து., சங்கீதஞானி, இசைநாவலர், இலங்கை அரசின் சிறந்த பாடகர் விருது, தலைக்கோல் விருது வாழ்நாள் சாதனையாளர் விருது (Griffin College London)
யாக்கரு நெடுத்தனை கரவெட்டி கிழக்கினை பிறப்பிடமாகவும் வீரபத்திர கோவிலடி உடுப்பிட்டி தெற்கினை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை குமாரசாமி அவர்கள் கடந்த (16.08.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை கண்ணகை தம்பதியரின் தவப்புதல்வனும், இராசரத்தினம் இராசலட்சுமி தம்பதியரின் மூத்த மருமகனும், வரதலட்சுமியின் (சங்கீத பூசணம் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) ஆருயிர்க் கணவரும், சிவகாமியின் அன்புத் தம்பியும், சுகன்யா (Company Director-London), சுரேந்தர் (Supervisor - London), பிருந்தாவனி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - கரவெட்டி), வீனாயாகினி (யா/குடத்தனை அ.த.க. பாடசாலை ஆசிரியர்), சஜீவன் (Chemist-Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜீவராஜா நட்நேஷ் ஆகியோரின் பாசமிகு வளர்ப்புத் தந்தையும், Dr.சிவப்பிரியன் (Consultant Physiecian-London), சிரோமி (Cashier - London), செந்தில்குமரன் (வங்கி உத்தியோகத்தர்- மருதங்கேணி), பாரத் (பொலிஸ் உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்), அகிமாலினி (Senior Analyst - Royal Bank of Canada) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திரிஷான், திரிஷிகா (London), அருஷ், நிகிந், யஷ்விகா (London), அபிலாஷ் (யா/உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி), அல்கா (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும், நந்தகோபால், சாரதா, சுதர்சினி, கோமதி, சிவகுமார், பங்கைஜன் ஆகியோரின் தாய்வழி மாமனாரும், ஜெயலட்சுமி, நித்தியானந்தலட்சுமி, வரதராஜா, சிறிஸ்கந்தராஜா, ஞானலட்சுமி, ஜீவராஜா, அமரர் விவேகானந்தம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.08.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உடுப்பிட்டி கரம்பாவளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் கோவிலடி,
உடுப்பிட்டி தெற்கு, உடுப்பிட்டி.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

(CR 40453) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
## சபைநிதி -2023
## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வட மாகாணம்

01. சபைநிதி – 2023 மூலமான ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு (தொலைபேசி: 021 229 1023 e.mail – pkipsmullai@gmail.com ) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணி வரை 28.08.2023 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பிரதேச சபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு எனும் இடத்திலிருந்து 18.08.2023 ம் திகதியிலிருந்து 28.08.2023 ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 3000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு எனும் முகவரிக்கு 29.08.2023 ம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும்.

07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 45 (13.10.2023) நாட்கள் வரை செல்லுபடியாகும்.

08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். இத் தொகையினை வங்கிப் பிணையாக மாத்திரம் செலுத்த முடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(04)/Coun./Cap./Dev/01/2023 | தலைமை அலுவலகத்திற்கு குளிரூட்டி பொருத்துதல் | 3.0 | 30 நாட்கள் | வடமாகாணத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் | 30,000.00 | 10/11/2023 |
| NP/14/44(04)/Coun./Cap./Dev/02/2023 | வீதி விளக்கு கொள்வனவு | 1.7 | 30 நாட்கள் | | 17,000.00 | 10/11/2023 |
| NP/14/44(04)/C.Ser/2023 | திருமுறுகண்டி ஆலய வளாகத்திலுள்ள சபை கட்டண கழிப்பிடம் மற்றும் அண்டிய சூழலிற்கான சுத்திகரிப்பு பணி | - | 122 நாட்கள் | | 20,000.00 | 10/11/2023 |

09. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிரதேசசபை பெறுகைக்குழு**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை.**
**புதுக்குடியிருப்பு**

**18.08.2023**

# றைனோஸ் கிண்ண கிரிக்கெட் சில ஆட்ட முடிவுகள்!



யாழ்ப்பாணம், ஓக. 18

சுழிபுரம் றைனோஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில், முதல்நாள் ஆட்ட முடிவுகள்:

முதலாவது போட்டியில் சங்கானை டொமினேற்றர்ஸ் மற்றும் ஸ்ரார் போய்ஸ் அணிகள் மோதிக்கொண்டன. இதில் சங்கானை டொமினேற்றர்ஸ் அணி 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டியில் ஆனைக்கோட்டை ராவன் றைடர்ஸ் அணியும் பொன்டி போய்ஸ் அணியும் மோதின. இதில் பொன்டி போய்ஸ் அணி இரண்டு ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

தொடர்ந்து, கூல் போய்ஸ் மற்றும் கொக்குவில் ஸ்ரார் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் கூல் போய்ஸ் அணியினர் நான்கு ஓட்டங்களால் வெற்றிபெற்றனர்.

சங்கானை டொமினேற்றர்ஸ் மற்றும் ஆனைக்கோட்டை றாவன் றைடர்ஸ் அணிகள் மோதிய மற்றொரு ஆட்டத்தில், றாவன் ரைடர்ஸ் அணி 8 விக்கெட்டுகளால் வென்றது.

வராகி சுப்பர் கிங்ஸ் மற்றும் ஸ்ரார் போய்ஸ் அணியினர் மோதிய அடுத்த ஆட்டத்தில்,ஸ்ரார் போய்ஸ் அணியினர் 6 விக்கெட்டுகளால் வென்றனர்.

கூல் போய்ஸ் மற்றும் பொன்டி போய்ஸ் அணியினர் மோதிய இன்னொரு ஆட்டத்தில், கூல் போய்ஸ் அணியினர் ஓர் ஓட்டத்தால் வெற்றி பெற்றனர். (ம-125)


# பெயர் மாற்றம்

இல.55, சிவபுரம் - வவுனிக்குளம், முல்லைத்தீவில் வசிக்கும் **வசந்தராணி** (Vasantharani) ஆகிய நான் எனது பெயரை **வசந்திராதேவி** (Vasanthirathevy ) என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **வசந்திராதேவி** (Vasanthirathevy ) என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

(es.23029) (2.6) **வசந்திராதேவி** (Vasanthirathevy )

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 03 . 1943



மறைவு 14 . 08 . 2023

## நாகமுத்து இராசலிங்கம்

யாழ். புங்குடுதீவு, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Mantes la Jolie ஐ வதிவிட மாகவும் கொண்ட நாகமுத்து இராசலிங்கம் கடந்த (14.08.2023) திங்கட்கிழமை புங்குடுதீவில் உள்ள அவரது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - அன்னபூரணி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் (முன்னாள் வருமான வரித் திணைக்கள வரி மதிப்பாளர்) அன்புக் கணவரும், அகல்யா, சஞ்சயன், கௌசல்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீதரன், காருண்யா, ரவிதாசன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், சோமலிங்கம், தட்சணாமூர்த்தி மற்றும் திலகவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், லீலாவதி (வவுனியா), சிவஞானேஸ்வரி (கோப்பாய்), காலஞ்சென்ற பரநிருபசிங்கம் மற்றும் சரோஜா (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவத்திராதேவி மற்றும் கமலாதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாகரத்தினம் (முன்னாள் யாழ். இந்துக் கல்லூரி உப அதிபர்), காலஞ்சென்ற பஞ்சரத்தினம் ஆகியோரின் அன்புச் சகலனும், நேத்ரா, நீரஜா, தர்வின், கனிஸ்கா, மதுஷன், ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் குறிகட்டுவான் வீதி, சாங்காத்தகேணி, புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முனைப்புலம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/51705)AH-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 03 . 1928



மறைவு 15 . 08 . 2023

## மாரிமுத்து கனகசபை

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து கனகசபை கடந்த (15.08.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து செல்லாச்சி தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற சிவகுரு தில்லைவனம் தம்பதியரின் மருமகனும், ருக்குமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவஞானம், பாலசுந்தரம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சற்குணவதி, மனோகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கமலாம்பிகை, பராசக்தி, தயாபதி, பரமேஸ்வரி, மங்கையற்கரசி, கௌரி, லோகேஸ்வரி காலஞ்சென்ற மகேஸ்வரன், பரமகுருநாதன் ஆகியோரின் அன்பு தந்தையும், செல்லத்துரை, கோபாலசிங்கம், ஜெயபாலசிங்கம், சண்முகநாதன், நிமலரட்ணம், ஜெயரங்கன், பிரபாகரன், தமிழினி ஆகியோரின் மாமனாரும், தனேஸ், விஜிதா, சதீஸ், பிரகாஸ், லோயன், முகுந்தன், லாணி, நிரு, காலஞ்சென்ற பிரசாந், சிந்து, சுஜித், காவின், மெலானி, சர்மி, மிதுலன், தேனு, கீர்த்தி, கார்த்தி, சாயி, சாங்கி, பிரணவன், மகேஷ், கிருத்திகா ஆகியோரின் பேரனும், மதனா, இஷா, கர்ஜித், நிருத்திகன், டினோசிகன், தஸ்மிதன், ஜெனித்தன், இனியன், ஆதித்யா ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பழைய புகையிரத வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 567 1967**
**077 899 6258**

(cs 51685) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் குருநகர் புனித ஜேம்ஸ் தேவாலயத்தில் கடந்த மாதம் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆலய திருவிழாவில் பாப்பரசர் பிரான்சிஸின் இலங்கைக்கான பிரதிநிதி வண. கலாநிதி பிறாயன் ஊடக்வே பங்கேற்றிருந்தார். இந்த விழாவில் வடமாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம்.சார்ஸ்ஸ் கலந்துகொண்டார்.வண.கலாநிதி பிறாயன் ஊடக்வே தனது சிறப்புரையை ஆற்றும்போது, வடமாகாண ஆளுநரை விழித்து தான் வருகை தந்த சந்தர்ப்பத்திலே அவர் இங்கே கலந்துகொண்டிருப்பது கத்தோலிக்க திருச்சபையும் அரசாங்கமும் இணைந்து பணியாற்றுவதற்கான ஓர் அடையாளமாக உள்ளது என்றும் தான் வடமாகாணம் பற்றியும் இந்த மக்கள் பற்றியும் நன்கு அறிந்திருப்பதாகவும் கூறிய அவர் இந்த மக்களின் அன்பு மிகவும் பெரியதாக இருப்பதாகவும் கூறினார். (ய-27)



கிளிநொச்சி பளை மத்திய கல்லூரியில் அமரர் சின்னத்தம்பி நடேசபிள்ளை ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட ஆருக்ஷிகிருத்திக் கலையரங்கம் கடந்த மாதம் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்பட்டது.
இந்த நிகழ்வில், வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு குறித்த கலையரங்கத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார். (ய-113)




தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய திருமதி கவிதாம்பிகை பிரதீபன் வடக்கு மாகாணசபைக்கு இடமாற்றல் செய்யப்பட்டுள்ளார்.இவரது சேவையைப் பாராட்டி பிரதேச செயலக நிதிக் கிளையால் கடந்த 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரிவுபசார விழா நடத்தப்பட்டது. (ய-9)



கடந்த மாதம் 22ஆம் திகதி சனிக்கிழமை மாலை காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தில் இடம்பெற்ற பாவலர் அழ.பகீரதனின் வைரவிழா நிகழ்வின் காட்சிகள் (ய)

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 09 . 1940



மறைவு 17 . 08 . 2023

### சிதம்பரப்பிள்ளை செல்வராசா

**(ஓய்வுபெற்ற கட்டட படவரை கலைஞர்)**

கேசரி வீதி, தையிட்டி, காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை செல்வராசா அவர்கள் நேற்று (17.08.2023) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் முத்தாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லமலர் அவர்களின் அன்புக் கணவரும், செந்தூரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாயத் திணைக்களம் - வடமாகாணம்), வனஜா, பார்த்தூரன் (பொறியியல் உதவியாளர், திட்ட செயலகம், தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை, யாழ்ப்பாணம்), மதுஜா (ஆசிரியர், கிளி/ வட்டக்கச்சி மத்திய கல்லூரி), Dr. மாதூரன் (பிரதேச வைத்தியசாலை, மண்டைதீவு), கிரிஜா (மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், உஷாந்திகா (பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, உரும்பிராய்), குகானந்தன் (உரிமையாளர், சிறிகுகன் பான்சி, யாழ்ப்பாணம்), கஜவதனி (சிரேஷ்ட விரிவுரையாளர், விலங்கியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்), குகன் (பொது சுகாதார பரிசோதகர், கரைச்சி MOH) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், செல்வபூரணம், அன்னபூரணம், சரஸ்வதி, செல்வரட்ணம், தெய்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராசா, மகாதேவன் ஆகியோரின் மைத்துனரும், பிருந்துஜன், துசாந்தன், ஆர்த்திகன், பிரனீஸ், லிபீஸ், அதித்திரி, ஆதினி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2023) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தையிட்டி இந்து மயானத்திற்கு (ஆவளை) எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கேசரி வீதி, தையிட்டி,**
**காங்கேசன்துறை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**02[illegible]**

CS 25976 A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 01 . 1952



மறைவு 17 . 08 . 2023

### கதிர்காமு கனகசிங்கம்

கண்டாவளையை பிறப்பிடமாகவும் உசனை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமு கனகசிங்கம் அவர்கள் 17.08.2023 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், தயாவதியின் அன்பு கணவரும் தாரணி, தர்சினி (US) ஆகியோரின் அன்புத் தந்தையும் லிங்கராசா, சிவனேஸ்வரன் (US) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் துருபதன், மதுஷன், கோமதன், சுமாயா, சோமிலா, சாருண்யா, மொகினாத், யசாசினி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற கந்தர் கார்த்திகேசு, காலஞ்சென்ற தெய்வானை ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று 18.08.2023 முற்பகல் 11 - 12 மணியளவில் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, ஈச்சங்காட்டு மயானத்தில் தகனக்கிரியை செய்யப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**உசன், மிருசுவில்**

**தகவல் : குடும்பத்தினர்.**
**077 9455 135**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலப்பெருமாள் குளத்தை புனரமைப்புக்கு உட்படுத்துக!

## அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஓக. 18**

**முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளத்தை சீரமைப்புக்குட்படுத்துமாறு அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



1968ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தக் கிராமத்தில் 110க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. அவை முற்றுமுழுதாக விவசாயக் குடும்பங்களாகவும் உள்ளன. இந்த நிலையில் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இந்தக் குளத்தை சீரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குளத்தைச் சீரமைக்குமாறு கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில், பகுதியளவான சீரமைப்புகளே மேற்கொள்ளப்படுகின்றவே தவிர நிரந்தரச் சீரமைப்புகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும், குளத்தை முற்றாகச் சீரமைக்கும் பட்சத்தில் 600 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தில் விவசாயம் மேற்கொள்ளமுடியும் என்றும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-13)

# இழுவைப்படகு அத்துமீறல் தீர்க்கமான முடிவைக் காண்க

## தொழிலாளர் சமூகக் கூட்டமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.18

இந்திய இழுவைமடிப் படகுகளின் அத்துமீறல் - வடபுல மீனவர்களின் துயரங்கள் ஆகியவை குறித்து தமிழகத்தில் இடம்பெறவுள்ள மாநாட்டில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் வலியுறுத்தி தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டும் என்று அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கான மாநாடொன்று இன்று வெள்ளிக்கிழமை தமிழகத்தில் நடைபெறவுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அதில் பங்கேற்கவுள்ளார். போர் நிறைவடைந்து 30 ஆண்டுகாலம் கடந்த போதிலும் எமது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த முடியாதுள்ளது. யாழ்ப்பாணம் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு என 2 லட்சம் மீனவர்கள் கடற்றொழிலை ஜீவனோபாயமாக மேற்கொண்டு வருகின்றனர். வாரத்தில் 3 நாள்கள் கூட இந்திய இழுவைமடிப்படகுகளால் தொழிலை தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியாத சூழலில் அடுத்த சந்ததி மாற்றுத் தொழிலை நாடவேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஆகவே, வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் இன்னல்களை இந்த மாநாட்டில் தமிழக முதலமைச்சருக்கு எடுத்துரைக்க வேண்டும். இது தொடர்பில் கலந்துரையாட மீனவர்களான நாம் தயார்க இருக்கின்றோம் - என்றார். (ச-125)

## 'லைசென்ஸ்' பெற

# எழுத்தறிவற்றோருக்கு வாய்மொழிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக. 18

எழுதுதல், வாசித்தல் திறன் குறைந்தவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான வாய்மொழிப் பரீட்சைகளை எதிர்வரும் 25ஆம் மற்றும் 26ஆம் திகதிகளில் யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் நடத்தவுள்ளது. ஏற்கனவே சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான எழுத்துப் பரீட்சையில் இரண்டு தடவைகள் தோற்றி சித்தியடையத் தவறிய யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகளே இந்த வாய்மொழிப் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

பரீட்சார்த்திகள் பிரதேச செயலகத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று கிராமஅலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டு, எழுதுதல், வாசித்தல் திறன் குறைந்தவர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பிரதேச செயலாளரால் ஒப்பமிடப்பட்ட ஆவணங்களுடன் முற்பதிவு செய்து வரவேண்டும் என்று யாழ்.மாவட்டச் செயலர் அறிவித்துள்ளார். (ச-27)

## முறையற்ற சடல அடக்கம்

# அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் மயானத்தில் குழியொன்று வெட்டப்பட்டு மருத்துவமனைக் கழிவுகளான மனித எச்சங்கள் முறையற்ற விதத்தில் அடக்கம் செய்தமை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களை உள்ளடக்கியதான விரிவான அறிக்கையை ஒரு வாரத்தில் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் மயானத்துக்கு அருகில் கடந்த வியாழக்கிழமை சிசு ஒன்றின் உடற்பாகங்கள் சிதைந்த நிலையில் மீட்கப்பட்டன.

மயானத்தில் மருத்துவமனைக் கழிவுகளை புதைக்கும் குழி ஒழுங்காக மூடப்படாதிருந்தமையும் அந்தக் குழியில் மனித எச்சங்கள் அடக்கம் செய்யப்பட்டமையுமே அதற்குக் காரணம் எனக் கண்டறியப்பட்டது. அதனையடுத்து குழி மூடப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் சட்டமருத்துவ அதிகாரியால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் உட்பட மூவரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை நீதிமன்றில் மூவரும் முன்னிலையான நிலையில், கோம்பயன்மணல் மயானத்தில் உள்ள சடலங்கள் புதைக்கும் குழி ஏன் மூடப்படுவதில்லை? சடலக்குழி மூடாமை தொடர்பில் விரிவான அறிக்கை ஒன்றை ஒரு வாரத்தில் வழங்க வேண்டும் என்று யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஆனந்தராஜா யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் ஜெயசீலனுக்கு உத்தரவிட்டார். (ச-26-27)



# இனத்தைப் பாதுகாப்பதற்கு கலாசாரத்தைப் பேணுங்கள்

## முல்லை. மேலதிக மாவட்டச் செயலர் அறிவுரை

முல்லைத்தீவு, ஓக. 18

ஓர் இனத்தினுடைய ஆதிக்கம் அந்த இனத்தினுடைய கலையிலும் கலைசார்ந்த அம்சங்களிலுமே தங்கியுள்ளது. இந்த விடயங்கள் தற்போது எங்களை விட்டு அருகிச் செல்கின்ற நாகரிகம் தலைதூக்கியுள்ளது. எங்களின் இன இருப்பையும் கலாசார விழுமியங்களையும் பேணவேண்டுமாயின் எங்களின் கலைகளும் கலாசாரப் பண்புகளும் எம்மை விட்டு நீங்காதவண்ணம் பேணி உரம் சேர்க்கவேண்டும்.

இவ்வாறு முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.



முல்லைத்தீவு - முள்ளியவளையில் அரங்கேற்றப்பட்ட 'வன்னி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் வரலாற்றைச் சித்திரிக்கும் முல்லை மோடி வட்டக்களரி கூத்து' நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும் உரையாற்றியதாவது:-

அடங்காப்பற்றின் வன்னி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியன் வரலாற்றை முல்லை மோடி எழுதியுள்ளார். வரலாற்றை சிறந்தமுறையில் கடந்த காலங்களில் கலைவடிவம் ஊடாகப் பேணி வந்த கலாபூஷணம் என்.எஸ். மணியம் எழுத்துருவாக்கம், நெறியாள்கை, உடை அலங்காரம், ஒப்பனையுடன் சிறப்புற அரங்கேற்றியுள்ளார்.

கூத்து மரபுகளில் யாழ்ப்பாணத்துக்கென்று கிழக்கு மாகாணத்துக்கென்று வன்னி மாவட்டத்துக்கென்று தனித்தனி மரபுகள் உள்ளன.

நாங்கள் இன்று எங்களின் எத்தனையோ விடயங்களை இழந்து கொண்டிருக்கின்றோம். எங்களின் மரபுரிமைகள் எல்லாம் மறக்கப்பட்டு-மறுக்கப்பட்டு வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

ஒரு மனிதனுடைய உயர்வு - அவனின் நிலைத்தன்மை - ஒரு இனத்தின்னுடைய ஆதிக்கம் அனைத்தும் அவனுடைய கலையிலும் கலை சார்ந்த அம்சங்களிலும் வழிபாட்டு மரபுகளிலும்தான் பொதிந்துள்ளது.

இப்படிப்பட்ட விடயங்கள் எல்லாம் எங்களைவிட்டு அருகிச் செல்கின்ற நாகரிகம் எமது இனத்தின் இருப்பை அழிக்கின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது.

மீண்டும் நாங்கள் எங்களின் இன இருப்பையும் கலாசார விழுமியங்களையும் பேணவேண்டுமாயின் எங்களின் கலைகளும் கலாசாரங்கள்ளயும் பேணுவதற்கு எல்லோரும் உரம் சேர்க்கவேண்டும், எமது மண்ணின் பெருமைகளை தேசங்கள் கடந்துகொண்டு செல்ல வேண்டும் - என்றார். (ச-19)

# பொதுமலசலகூடத்தை அமைத்துத் தருக

## அக்கராயன் மக்கள் வலியுறுத்து

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் பொதுமலசலகூட வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்களும், பொதுஅமைப்புகளும் வலியுறுத்தியுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஓர் உப நகரமாகவும், வர்த்தக நகரமாகவும் அக்கராயன் மாறியுள்ளது.

அக்கராயனில் பொலிஸ் நிலையம், எரிபொருள் நிரப்பு நிலையம், கமநல சேவைகள் திணைக்களம் என்பன காணப்படுகின்றன.

இந்த நிலையில் பொதுமலசலகூடம் இல்லாதமையால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும், பொதுமலசலகூட வசதியொன்றை ஏற்படுத்தித் தருமாறும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்...

குருந்தூர்மலையில் ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை பொங்கலிட்டு வழிபாடுகளை நடத்துவதற்கு தமிழர் தரப்பு முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ள நிலையில், இந்த வழிபாடுகளால் மதப் பிரச்சினைகள் தோற்றம் பெறும் என்றும், அது உயிரிழப்புகளை ஏற்படுத்தும் அளவுக்குத் தீவிரமாகலாம் என்றும் குறிப்பிட்டு, பொங்கல் வழிபாட்டைத் தடைசெய்யுமாறு நீதிமன்றத்தில் பொலிஸார் தடைக்கட்டளை ஒன்றை நேற்றுக் கோரினார்கள்.

சப்புமல்கஸ்கட ராஜமகா விகாராதிபதி இந்தப் பொங்கல் நிகழ்வைத் தடுத்து நிறுத்த முனைப்புடன் உள்ளதால், கலவரமொன்று வெடித்தால் அது பாரதூரமாக மாறும் என்றும், குருந்தூர்மலை விவகாரத்தில் முனைப்புடன் செயற்பட்டுவரும் பீற்றர் இளஞ்செழியன் மற்றும் துரைராசா ரவிகரன் ஆகியோருக்கு எதிராக தடைக்கட்டளை பிறப்பிக்குமாறும் தமது சமர்ப்பணத்தில் பொலிஸார் கோரினார்கள்.

பொலிஸாரின் சமர்ப்பணங்கள் நேற்றையதினம் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தின் நீதிபதி ரி.சரவணராஜாவால் பரிசீலிக்கப்பட்டன. இதன்போதே நீதிவான் இவ்வாறு கட்டளையிட்டார்.

நீதிவானின் கட்டளையின் சாராம்சம் வருமாறு:-

வழிபாட்டு உரிமை என்பது ஒவ்வொரு மதத்தினருக்கும் அரசமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள விடயமே. எனவே இதை மறுப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை. ஒரு குழுவினர் தமது வழிபாடுகளை முன்னெடுக்கின்ற போது, அதற்கு இன்னுமொரு பிரிவினர் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர் என்பதற்காக எந்தவொரு தரப்பினரினதும் வழிபாட்டு உரிமையை மறுக்கமுடியாது. அவ்வாறெனின் இங்கே மத உரிமைகளுக்கும் - வழிபாடுகளுக்கும் எதிர்ப்பை வெளிப்படுத்துவதுதான் பாரதூரமான குற்றமாகும். எனவே சப்புமல்கஸ்கட ராஜமகா விகாராதிபதியோ அல்லது அவருடன் வரும் குழுவினரோ இது விடயத்தில் தலையிடுவதற்கு எந்த அதிகாரமும் இல்லை. அவ்வாறு எவராவது குழப்பம் விளைவித்தால் அவ்வாறானவர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டுமே அன்றி, வழிபாட்டுரிமைக்குத் தடைபோட முடியாது. அத்துடன், துரைராசா ரவிகரன் மற்றும் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோருக்கும் வழிபாடுகளை நடத்தத் தடைபோடமுடியாது. அவர்களால் பிரச்சினைகள் ஏற்பட்டால், அவர்கள் தொல்பொருள்களுக்குச் சேதம் விளைவித்தால் அவர்களைக் கைதுசெய்து பொலிஸார் நீதிமன்றத்தில் முற்படுத்தலாம் - என்றுள்ளது. (அ-ம-26)

## குருந்தூரில்...

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனாருக்கு இன்று பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ள ஏற்பாடாகியுள்ள நிலையில், 'எவ்வாறு பொங்கலிடவேண்டும்?' என்பது தொடர்பான விளக்கம் தொல்பொருள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தொல்பொருள் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

நிலம் மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிடும் திறந்தவெளியில் பொங்கலிட வேண்டும்.

தகரம் வைத்து தொல்பொருள் அல்லாத மணல், கல், செங்கல் போன்றவற்றை வைத்து அதன்மேல் தீமூட்ட வேண்டும்.

வனத்துறையினரின் பாதுகாப்புக்கு உட்பட்ட இடமாகவும் இந்தப்பகுதிகள் இருப்பதால் வனத்துறையின் அறிவுறுத்தலும் பெறப்படவேண்டும்.

தொல்பொருள் சின்னங்கள் மீது உணவு, பழம், தேங்காய் உள்ளிட்டவற்றை வைக்கக்கூடாது.

தொல்பொருள்களில் தேங்காய் உடைத்தல் அல்லது பால் போன்ற திரவப்பொருள்களைத் தெளித்தல் தடை செய்யப்பட்டுள்ளது - என்றுள்ளது. (அ-ம-26)

## குருந்தூர்மலையில் சிவாலயம்...

குருந்தூர்மலையில் அமைக்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய விகாரையின் விகாராதிபதி இதற்கு அனுமதி வழங்கியுள்ளார் என்று சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் அறிவித்தார்.

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளாமல் அவர்களுக்குத் தெரியாமல் யாழ்ப்பாணம், ஆரியகுளம் நாகவிகாரையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. குருந்தூர்மலையில் அமைக்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய விகாரையின் விகாராதிபதி தலைமையில் இடம்பெற்றுள்ளது. நீண்டநேரம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மறவன்புலவு சச்சிதானந்தம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு குருந்தூர்மலைக்குச் சென்றோம். அங்கு வழிபாடுகளை மேற்கொண்டோம். இதன்போது குருந்தூர்மலையில் சிவாலயம் ஒன்று இருந்தது என்று நாம் தெரிவித்தோம். இதன்பின்னர் விகாராதிபதி தானாகவே எம்மைத் தொடர்புகொண்டு குருந்தூர்மலையில் சிவாலயம் ஒன்றை அமைக்கத் தீர்மானித்துள்ள தனது விருப்பத்தைத் தெரிவித்தார். இது தொடர்பில் சந்திக்கவும் கேட்டார். அவர் யாழ்ப்பாணம் வரும்போது சந்திக்கலாம் என்று நாம் கூறினோம். கடந்த நான்கு நாள்களுக்கு முன்னரும் என்னுடன் கதைத்தார். அதன் தொடர்ச்சியாகவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இன்றைய கலந்துரையாடலில் குருந்தூர்மலையில் சிவாலயம் அமைப்பதற்கான தனது விருப்பத்தை எல்லோர் முன்பாகவும் வெளிப்படுத்தியுள்ளார். அதாவது ஏற்கனவே எம்மிடம் தெரிவித்த தன் விருப்பத்தை இன்று அனைவருக்கும் பொதுவாகப் பறைசாற்றியுள்ளார். உண்மையில் இது மகிழ்ச்சிப்பட வேண்டிய - பெருமைப்பட வேண்டிய தருணம் - என்றார்.

### பொங்கலில் விருப்பமில்லை

இதன்போது, குருந்தூர்மலையில் இன்றையதினம் இடம்பெறும் பொங்கல் தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவினார்கள். இதற்குப் பதில் வழங்கிய மறவன்புலவு சச்சிதானந்தம், உண்மையில் அங்குள்ள நிலைவரங்களை அங்கு நீங்கள் சென்று பார்த்தால்தான் தெரிந்துகொள்ளமுடியும். ஒரு பொங்கலில் பங்கெடுக்க வேண்டுமானால் அதற்கு விருப்பம் வரவேண்டும். அரசியலுக்காக பொங்கலைச் செய்யமுடியாது. நாளைய (இன்றைய) பொங்கலில் எனக்கு மனம் ஒப்பவில்லை - என்றார். (அ-ம-26,66,27)

## குருந்தூர்மலையில் இன்று...

கொண்டு வழிபாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்று குருந்தூர்மலை ஆலய நிர்வாகத்தினரும், சமூக மட்ட அமைப்புகளும் அழைப்பு விடுத்துள்ளன.

குருந்தூர்மலையில் இறுதியாக கடந்த மாதம் 14 ஆம் திகதி பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டபோது பிக்குகள் தலைமையில் வருகைதந்த காடையர்குழு பொங்கல் வழிபாட்டுக்குத் தடைகளை ஏற்படுத்தியது. பொலிஸாரும், பிக்குகள் தலைமையிலான குழுவுக்கு ஆதரவாகவே செயற்பட்டனர். இது தொடர்பில் பொலிஸ் முறைப்பாடும் பதிவுசெய்யப்பட்டது. இந்த முறைப்பாடு நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது, தமிழர்களின் வழிபாட்டு உரிமையை மறுக்கவில்லை. இனமுரண்பாடு ஏற்படாமல் பாதுகாப்பதற்காகவே பொலிஸார் வழிபாட்டைத் தடுத்து நிறுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. நீதிமன்றம் விடுத்த அறிவுறுத்தல்களைத் தொடர்ந்து குருந்தூர்மலையில் இன்றையதினம் மீண்டும் பொங்கல் வழிபாடுகளுக்கு ஏற்பாடாகியுள்ளது. இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் இருந்து பொங்கல் வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (அ-ம,26,125,246)

## குருந்தூர்மலையை...

ஆலயத்தில் இன்று பொங்கலிடுவதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்த நிலையிலேயே பொங்கலைக் குழப்பும் வகையில் இந்த அறிவித்தல் சிங்களக் கிராமங்களில் ஒட்டப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் அனுமதியுடன், ஆதிசிவன் ஐயனாருக்குப் பொங்கலிடுவதற்காகக் கடந்த முறை ஏற்பாடுகள் இடம்பெற்றபோது, பௌத்த பிக்குகள் சிலரால் அழைத்துவரப்பட்ட காடையர்குழு அங்கு வன்முறையில் ஈடுபட்டதுடன், பொங்கலையும் குழப்பியது. அந்தக் குழுவுக்கு ஆதரவாக பொலிஸாரும் செயற்பட்டனர். பொலிஸார் கற்பூரத்தீபத்தை சப்பாத்துக் கால்களால் மிதித்து அணைக்கும் வீடியோக்களும் ஒளிப்படங்களும் சமூக ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின. இவ்வாறானதொரு பின்னணியில் இம்முறையும் சிங்கள மக்களை உசுப்பேற்றும் வகையிலான முன்னேற்பாடாக துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## ரவிகரன்...

கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு மாகாண பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர், உயர்நிலை பொலிஸ் அதிகாரிகள், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், வனஉயிரிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கல்கமுவ சந்தபோதி தேரர் ஆகியோரும் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது தொல்பொருள்களுக்குச் சேதம் விளைவிக்காமல் வழிபாடுகளை மேற்கொள்ளும்படியாக இளஞ்செழியன் மற்றும் ரவிகரன் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கு ரவிகரன் தரப்பும் சம்மதம் தெரிவித்துள்ளது. அதேநேரம், கடந்தமுறை போன்று எதிர்த்தரப்பால் (பிக்குகள் தரப்பால்) குழப்பம் விளைவிக்கக்கூடாது என்றும், அவ்வாறு குழப்பம் விளைவித்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ரவிகரன் தரப்புக் கோரியுள்ளது. இதற்கு பொலிஸாரும் சம்மதம் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

## துர்க்காதேவி...

மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறவுள்ள இந்த ஆலய மஹோற்சவத்தில், எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குத் திருமுறைத் திருவிழாவும், 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு தங்கரதத் திருவிழாவும், 23ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்குத் திருமஞ்சத் திருவிழாவும், 26ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், அன்றையதினம் மாலை 5 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும், 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்குச் சப்பறத் திருவிழாவும், 28ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும், 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்குத் துர்க்கா புஷ்கரணி தீர்த்தக் கேணியில் தீர்த்தத் திருவிழாவும், அன்றைய தினம் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளன. (அ-ம-66)

## மாணவர்கள் இருவர்...

அருகிலுள்ள நீர்நிலையில் தவறிவீழ்ந்து உயிரிழந்துள்ளனர். மிஸ்லான் (வயது - 14), நிப்தி (வயது - 15) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வவுனியா தெற்கு கல்விவலயத்தின் வலயமட்ட விளையாட்டுப்போட்டிகள் பம்பைமடுவில் அமைந்துள்ள வவுனியாப் பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்றன. விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்காகச் சென்ற வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களில் இருவர் மைதானத்துக்கு அருகிலுள்ள நீர்நிலையில் எதிர்பாராதவகையில் திடீரென மூழ்கியுள்ளனர். அவர்கள் நீரில் மூழ்கியதை அவதானித்த ஏனைய மாணவர்கள் இது தொடர்பில் அனைவருக்கும் தெரியப்படுத்தினார்கள். இராணுவத்தினருக்கும் வவுனியா தீயணைப்புப் பிரிவினருக்கும் அறிவிக்கப்பட்டு, அவர்களும் இளைஞர்களுமாகச் சேர்ந்து மூழ்கிய மாணவர்களை மீட்கக் கடுமையாகப் போராடினர். எனினும் சுமார் ஒரு மணிநேரத்தின் பின்னர் மாணவர்கள் இருவரையும் சடலமாகவே மீட்கமுடிந்தது.

### துணைவேந்தர் மீது குழுவொன்று தாக்குதல்

சம்பவம் தொடர்பில் கேள்வியுற்ற பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரன் அந்தப் பகுதிக்கு உடனடியாக விரைந்து சென்றார். இதனை அவதானித்த குழுவொன்று அவர் மீது தாக்குதலை முன்னெடுத்தது. இதனால் குறித்த பகுதியில் குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டது. கடமையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். பின்னர் பொலிஸாரின் பாதுகாப்புடன் துணைவேந்தர் அழைத்துச் செல்லப்பட்டார். (அ-ம-110,18)

## விபத்தில்...

வவுனியாவில் இருந்து ஈரப்பெரியகுளம் நோக்கிப் பயணித்த மோட்டார்சைக்கிளும், அநுராதபுரத்தில் இருந்து வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த டிப்பர் ரக வாகனமும் நேருக்குநேர் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது. இதன்போது மோட்டார்சைக்கிளில் பயணித்தவரே உயிரிழந்துள்ளார். விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-110,18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாணவர்கள்...

மூழ்கி உயிரிழந்த விடயம் தொடர்பில், நிர்வாகமட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் விரைவான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார்.

மாணவர்களின் உயிரிழப்புத் தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸும் உத்தரவிட்டுள்ளார். இறந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு தன் இரங்கலையும் அவர் தெரிவித்தார். (அ-ம.26)

## மருதமடு...

மன்னார், நானாட்டான் - புதுக்கமத்தைச் சேர்ந்த ஜெகநாதன் டிறோன் (வயது - 28), நீர்கொழும்பைச் சேர்ந்த கிருஷ்ணன் சிவகுமார் (வயது - 44), யாழ்ப்பாணம் குருநகர் பகுதியைச் சேர்ந்த லூயிஸ் அந்தோனியம்மாபிள்ளை (வயது-62) ஆகிய மூவருமே மடுத்திருவிழாவில் உயிரிழந்தவர்களாவர். இவர்களில் ஜெகநாதன் டிறோன் பாம்பால் தீண்டப்பட்டும், கிருஷ்ணன் சிவகுமார் ஈரல் பாதிப்புக் காரணமாகவும், லூயிஸ் அந்தோனியம்மாபிள்ளை மாரடைப்புக் காரணமாகவும் உயிரிழந்துள்ளனர். இறப்பு விசாரணைகளை மரண விசாரணை அதிகாரி எஸ்.ஈ.குமணகுமார் மேற்கொண்டார். (அ-ம-60)

## குளத்திலிருந்து சடலம் மீட்பு!

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாதன் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள குளமொன்றில் இருந்து ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை என்றும், வலிப்பு நோய் காரணமாகவே அவர் நீரில் மூழ்கி இறந்துள்ளார் என்றும் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது. சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டனர். (அ-ம-113)


### பணியாளர் தேவை

1. ஓட்டைக்கல், பூச்சாடி, தூண் அரிதல் என்பன அரிவதற்கு அனுபவம் உள்ளவர்கள்.
2. பில் கிளாக், பணவசூலிப்பாளர்

077 909 1099

### வேலைக்கு ஆள்தேவை

வீட்டு வேலை பார்ப்பதற்கு பெண் வேலையாள் ஒருவர் உடனடியாகத் தேவை.
(தேவைப்படின் தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்)

076 462 0055 (CS/51708) AH-1

### மணமகள் தேவை

1984 இல் பிறந்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற நிரந்தர வருமானம், சொந்த வீடும் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

Viber or Whatsapp (CS/51608) AH-1
0044 7578 626565, 077 251 9150
Email add: rajasasikumar@gmail.com

### பணிப்பெண் தேவை

கொழும்பில் தங்கிநின்று குழந்தை பராமரிப்பு செய்வதற்கு பெண் உதவியாளர் தேவை.
தங்குமிடம், உணவு இலவசம்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : 077 4433 427

### வீடு வாடகைக்கு தேவை

திருநெல்வேலி மருத்துவ பீடத்திற்கு அருகாமையில் கொமட் வசதியுடன்கூடிய அனெக்ஸ் / வீடு தாயும் மகளும் தங்குவதற்கு தேவை.

தொடர்பு: 077 558 1631

### அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தானம்
### திருவண்ணை கன்னாதிட்டி
### யாழ்ப்பாணம்

## இராஜகோபுர திருப்பணி

அம்பிகை அடியார்களே!

நிகழும் சோபகிருது வருடம் ஆவணித்திங்கள் முதலாம் நாள் **(18.08.2023) வெள்ளிக்கிழமை காலை 7.35 மணி தொடக்கம் 9.05 மணிக்குள் வரும் சுப வேளையில்**

**அழகிய திதிதள இராஜகோபுரம்** நிர்மாணிப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற திருவருள் கூடியுள்ளது.

அடியார்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு இத்திருப்பணிக்கு தங்களாலியன்ற பங்களிப்பை நல்கி அம்பாளின் கிருபாகடாட்சம் பெற்றுய்ய வேண்டுகின்றோம்.

**தலைவர்,**
**அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்,**
**கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.** (cs.25984) (N.1)

**தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள்**
**021 222 5770**

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் **24 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.

* நிலப்பரப்பு
* மெயின் றோட் முகப்புடன் காபற் வீதி.
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 km மீற்றர் தூரம்.
* நான்கு நான்கு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* ஒரு பரப்பின் விலை ஐந்து லட்சம் (500,000/=)
* பின்பக்கம் உள்ள காணி 1 பரப்பு இரண்டு லட்சத்து ஐம்பது ஆயிரம் (250,000/=) மட்டும்
* நல்ல சூழலில் நன்னீர் ஊற்று.

(CS 25894)-1


தொடர்பு: **076 057 0354, 076 8260 354**

### மணமகள் தேவை

01. கொக்குவில் - கோண்டாவில், இந்து, கௌரவகுலம் (V). 1992. அனுசம். ACCA (UK), BBA (Australia), BSc (Australia), LLM (UK), ASS.Director, Divorce, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
02. சங்கானை. இந்து. கௌரவகுலம் (K). 1992. விசாகம். BA(Hons), Accounting, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
03. நீர்வேலி - கந்தர்மடம். இந்து. கௌரவகுலம் (V). 1992. அவிட்டம். BEng (UK), UK Citizen, Vegetarian மணமகனுக்கு மணமகள் தேவை.
04. உடுப்பிட்டி - கரணவாய். இந்து. கௌரவகுலம் (V). 1990. அவிட்டம். BSc Engineering, Newzealand மணமகனுக்கு மணமகள் தேவை.
05. சுருவில் - வண்ணார்பண்ணை. இந்து. கௌரவகுலம் (V). அச்சுவினி. 1987. MSc, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
06. புங்குடுதீவு. இந்து. கௌரவகுலம் (V). 1989. சுவாதி. MSc, Engineer கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.
07. நெல்லியடி. இந்து. கௌரவகுலம் (V). 1990. மகம். Bachelor of Engineering, கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.
08. வடலியடைப்பு. இந்து. கௌரவகுலம் (V). 1990. விசாகம். BSc, MBA; கொழும்பில் Consultant ஆக இருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
09. கொக்குவில். இந்து. கௌரவகுலம் (V). 1988. அனுசம். MBBS Doctor மணமகனுக்கு மணமகள் தேவை.
10. கோப்பாய் - சுன்னாகம். இந்து. கௌரவகுலம் (V). 1988. பூரட்டாதி. MBA, Financial Analyst, கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.
11. சண்டிலிப்பாய். இந்து. கௌரவகுலம் (V). 1989. அனுசம். B.S and Post Graduate, Human Resource Analyst, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
12. உடுப்பிட்டி. இந்து. கௌரவகுலம் (V). 1990. உத்திரட்டாதி. Phd (Japan), Civil Engineer, கனடா மணமகனுக்கு மணமகள் தேவை. (CS/51687)AH-1

Phone - 077 539 3728 Whatsapp - 077 803 8193


### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 15.04.1932 மறைவு 19.07.2023

கடந்த (19.07.2023) புதன்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் கந்தையா சரவணமுத்து

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (18.08.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் நடைபெற இருக்கும் மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**1 ஆம் கட்டை வீதி,**
**கிராம்புவில், சாவகச்சேரி.** (cs. 25973) (N-1)

**குடும்பத்தினர்**
**077 930 4617**

### மரண அறிவித்தல்

## பஞ்சலிங்கம் மதியழகன்

( Commercial Bank, Kottahena - Executive Assistant )



பூமகள் வீதி, அரியாலையை பிறப்பிடமாகவும் கொழும்பு தெகிவளையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பஞ்சலிங்கம் மதியழகன் (Executive Assistant Commercial Bank) 15.08.2023 செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பஞ்சலிங்கம் - மங்கையர்கரசி ஆகியோரின் அன்பு மகனும் மதிவதனி (UK), மதிவாணி ஆகியோரின் அன்பு தம்பியும் மதிவதனனின் (புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம்) பாசமிகு அண்ணாவும் ஜெயகரன் (UK), சுதாகரன், இஷபெல்லா ஆகியோரின் பாசமிகு மைத்துனனும் ஐதேஜன் (UK), தனஜன் (UK), ஜெயஷ்வினி (UK), பிரயஷ்வினி (UK), மித்ரா ஆகியோரின் அன்பு மாமாவும் கவிப்பிரணவின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**இல 11/4, பூமகள் வீதி,**
**அரியாலை மேற்கு,**
**யாழ்ப்பாணம்**

**தொடர்புக்கு :**
**077 222 5529**
**077 007 3491**

**தகவல்:**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.